# தமிழ்ப் பட்டதாரி ஆசிரியர்கள் பாடப் பகுதிகளுக்கான உயர்நிலைச் சிந்தனை வினாக்கள் உருவாக்கும் திறனை மேம்படுத்துதல்

**இரா. மணிமாலா எம்.ஏ.,எம்.எட்., எம்.பில்.,**

**விரிவுரையாளர்,**


| .எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1 | அறிமுகம் | 7 |
| 2 | செயலாய்வின் தேவை | 7 |
| 3 | ஆய்வின் நோக்கங்கள் | 8 |
| 4 | ஆய்வுமுறை | 8 |
| 4.1 | தலைப்பு விளக்கம் | 8 |
| 4.2 | ஆய்வு மாதிரிகள் | 9 |
| 4.3 | ஆய்வுக் கருவிகள் | 9 |
| 4.4 | முன்தேர்வு | 9 |
| 4.5 | பயிற்சிக் கட்டகம் மற்றும் பயிற்சி அளித்தல் | 10 |
| 4.6 | பின்தேர்வு | 20 |
| 5 | தரவுகளைச் சேகரித்தல் | 21 |
| 5.1 | தரவுகளைப் புள்ளியியல் ஆய்வுக்கு உட்படுத்துதல் | 21 |
| 5.2 | புள்ளியியல் ஆய்வின் அடிப்படையில் விளக்கம் அளித்தல் | 22 |
| 6 | ஆய்வு முடிவுகள் | 24 |
| 7 | பின்னூட்டம் | 24 |
| 8 | பிற்கால ஆய்வுக்கான வழிகாட்டுதல்கள் | 25 |
| 9 | ஆய்வு முடிவுகளைத் தொகுத்தல் | 26 |
| 10 | பார்வை நூல்கள் | 27 |
| | பின்னிணைப்புகள் | |
| | புகைப்படங்கள் | 28 |
| | முன்தேர்வு, பின்தேர்வு வினாத்தாள் | 29 |
| | விடைக் குறிப்புகள் | 30 |
| | விடைத்தாள் நகல் | 32 |


## 1. அறிமுகம்

நமது நாட்டின் முன்னேற்ற இலக்குகள் அடையப் பெறுவதற்கு இன்றியமையாத சமூக, பொருளாதார பண்பாட்டு மாற்றங்களைத் தோற்றுவிக்கும் வலுமிக்க கருவியாக கல்வி விளங்க வேண்டும்.

- கோத்தாரி கல்விக்குழு

புலன் காட்சித் திறன், நினைவாற்றல், கற்பனைத் திறன், பொதுமைக் கருத்துகளை உருவாக்கும் திறன், ஆய்வுத்திறன் போன்ற மனத்திறன்களும் மொழித் திறனும் (அடிப்படைத் திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ) அறிவு வளர்ச்சிக்கு உதவுகின்றன. கல்வி, அறிவுத் தேடலுக்கான பயணம் மட்டுமல்ல. அது எதிர்கால வாழ்வுக்கு அடித்தளம் அமைத்திடும் கனவின் தொடக்கமும்கூட. மொழியைக் கற்றலின் முதன்மை நோக்கம் அம்மொழியைப் பயன்படுத்த, அடிப்படைத்த திறன்ளைப் பெற்றிருத்தல் வேண்டும். இவை வாழ்க்கையில் முழுமையாகப் பயன்படுவனவாகும். இத்திறன்கள், பெரும்பாலும் பல்வேறு நிலைகளில் கருத்துப் பரிமாற்றங்களுக்கே பெரிதும் உறுதுணையாவன. ஒரு மொழியோடு ஒன்றி வாழ்வதற்கும் ஒருவர் தாம் பெற்ற மொழிப் பயனை பிறரும் பெற வைப்பதற்கும் மொழியில் உயர்நிலைத் திறன்கள் உதவுகின்றன. ஆசிரியர்கள் தாங்கள் நடத்தபோகும் பாடங்களில் முன்கூட்டியே உயர்நிலைத்திறன் வினாக்களைத் தயாரித்து மாணவர்களின் முன்னறிவை அறிவது அவசியம்

## 2. ஆய்வின் தேவை

ஆசிரியர்கள் புதிய சூழ்நிலைக்கேற்ப, நெகிழ்வுடனும் பயனுள்ள வகையிலும் இயங்கக் கற்றுக்கொள்ள வேண்டியது காலத்தின் தேவை. கல்வித்துறையின் கடின முயற்சியினால் சிறப்பானதொரு பாட நூல் தமிழ்மொழிக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது. அவற்றின் நோக்கத்தை முழுமையாக நிறைவேற்ற வேண்டுமாயின் பாடப்பொருளை ஆசிரியர்கள் முழுமையான உள்வாங்கிக்கொண்டு கற்பித்தலைத் தொடரும்போது மாணவர்களின் கற்றலும் அவர்களை மதிப்பீடு செய்தலும் சிறப்பாக அமையும். உயர்நிலைத் திறன்களுக்கான வினாக்களைத் தயாரிக்கும் பயிற்சியில் ஆசிரியர்கள் வினாத்தாள் தயாரிப்பில் மந்தன நிலையே காணப்பட்டது. மிக எளிய வினாக்கள் மற்றும் நேரடி வினாக்களாகவே அவர்கள் எழுதியிருந்தனர். மாணவர்களிடம் கற்பித்த பாடங்களைப் பற்றிய முழுமையான விளைவினை வெளிக்கொணர்வதற்கான முயற்சியில் அவர்களின் வினாக்கள் தயாரிப்பு போதுமானதாக இல்லை. ஆகையால் ஆசிரியர்கள் படித்த பகுதிகளைச் சிந்தித்து வினாக்களை உருவாக்கி புரிதலை மேம்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.பாடத்தில் உள்ள கருத்துகளை அப்படியே கூறுவதுடன் அப்பாடப்பொருளை மாணவர்கள் எளிமையாகப் புரிந்துகொள்ள ஏதுவாக அதற்கான வினாக்களைச் சிந்தித்து உருவாக்கி அதற்கான விடையினை அறிய முற்பட்டால் கற்றல் சிறப்பாக மனதில் நிலைக்கும்.

ஆசிரியர்கள் முன்மாதிரியாக படித்த பகுதிகளைச் சிந்தித்து வினாக்கள் உருவாக்கி புரிதலை மேம்படுத்த முற்படுவார்களாயின் மாணவர்களின் கற்றலும் அவர்கள் கற்றதை மதிப்பிடுதலும் சிறப்பாக அமையும்.அதன் சிறப்புடன் உள்வாங்கிக்கொண்டு செயல்படுத்த வேண்டும். ஆகையால் ஆசிரியர்களின் மொழி ஆளுமைக்கு இவ்வாய்வானது இத்தருணத்திற்குத் தேவையாக உள்ளது.

## 3. ஆய்வின் நோக்கங்கள்

- பாடப்பகுதிகளைக் கற்பிக்கும் முன்னர் ஆசிரியர்கள் அவற்றிற்குரிய வினாக்களைச் சிந்தித்து உருவாக்கி முழுமையாக உள்வாங்கிக்கொள்ளும் திறனை மேம்படுத்துதல்.
- பாடப்பகுதிகளுக்கான உயர்நிலை வினாக்களை உருவாக்கும் திறனை மேம்படுத்தி மாணவர்களின் கற்றலுக்கு வழிகோலுதல்.
- ஆசிரியர்கள் தாங்கள் நடத்தப்போகும் பாடத்திற்கான உயர்நிலைத் திறன் வினாக்களை உருவாக்கி வினவுவதால் மாணவர்களின் கற்றல் ஆர்வம் அதிகரித்தல்.
- ஆசிரியர்கள் வினாக்களைச் சிறப்பாக கட்டமைக்கும் திறனை மேம்படுத்திக்கொள்வதால் மாணவர்களும் வினாக்களுக்கு விடையளிக்கும் திறனை வளர்த்துக்கொள்ளுதல்.

## 4. ஆய்வு முறை

பரிசோதனை முறை

### 4.1 தலைப்பு விளக்கம்

தமிழ்ப் பட்டதாரி ஆசிரியர்கள் தாங்கள் பாடப்பொருளைக் கற்பித்தல் மட்டுமே பணி என்ற மனநிலையுடன் வினாக்கள் பாடநூலில் உள்ளவற்றை மட்டும் பயன்படுத்தியே பழக்கப்பட்டதால்தான் படித்த பகுதிகளைப் புரிந்துள்ளோமா என்பதும் வினாக்களை உருவாக்கி புரிதலை மேம்படுத்திக்கொள்ளலாம் என்று சிந்தித்தல் அரிதாகவே உள்ளது. ஆசிரியர்கள் தங்களின் நிலைப்பாட்டை உயர்த்தி பயன்பாட்டிற்குச் செயல்படுத்தினால் அச்செயல்பாட்டினால் மாணவர்களிடம் நிலையான புரிதலை ஏற்படுத்த முடியும் என்ற நிலைப்பாடே. ஆகையால் ஆசிரியர்கள் வினாக்கள் உருவாக்கும் திறனையும் படித்தலின் புரிதலை மேம்படுத்த வேண்டும். உயர்நிலைத் திறன் வினாக்களை வினவி மாணவர்களை விடையளிகச் செய்வதால் அவர்களின் கற்றல் விளைவுகளில் ஏற்றம் உண்டாகும்.

தமிழ்ப் பட்டதாரி ஆசிரியர்கள் பாடப்பொருளைக் கற்பித்தவுடன், மாணவர்களின் கற்றலை நேரடியான எளிய வினாக்கள் வாயிலாக வினவியவுடன் அப்பாடம் முடிவடைந்ததாகக் கருதும் நிலையே இன்றளவும் உள்ளது. வினாக்கள் உருவாக்கப் பணிமனையில் ஆசிரியர்கள் வினாக்கள் தயாரித்தபொழுதும் நேரடியான எளிய வினாக்களையே எழுதியிருந்தனர். இந்த நிலை மாற வேண்டுமாயின் ஆசிரியர்கள் தாங்கள் நடத்தப்போகும் பாடப்பொருள் தொடர்புடைய கருத்துகளை எடுத்துக்கொண்டு அதற்கான புரிதலை மேம்படுத்துவதற்கான வினாக்களை உருவாக்கி விடைகாண முயலும்போது பயனுடையதாக அமையும். ஆகையால் ஆசிரியர்கள் படித்த பகுதிகளின் புரிதலை மேம்படுத்த வினாக்களை உருவாக்கி புரிந்துகொள்ள வேண்டியது தேவையானதொன்றாகும்.

### 4.2 ஆய்வு மாதிரிகள்

திருப்பத்துார் ஒன்றியத்தில் எட்டாம் வகுப்பு கற்பிக்கும் 15 தமிழ் பட்டதாரி ஆசிரியர்கள்

### 4.3 செயலாய்வு கருவிகள்

முன்தேர்வு, பயிற்சி, பின்தேர்வு.

### 4.4 முன்தேர்வு

திருப்பத்துார் ஒன்றியத்தில் நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் 15 ஆசிரியர்களுக்கு உயர்நிலைத் திறன்களை உள்ளடக்கிய வினாக்களை வகுப்பறையில் பயன்படுத்துகிறார்களா என்பதை அறிந்துகொள்வதற்காக முன்தேர்வு வைக்கப்பட்டது.

முன்தேர்வு விடைத்தாள்களை ஆய்வு செய்ததில் உயர்நிலைத் திறன் வினாக்களை உருவாக்குவதில் ஆசிரியர்களுக்கு மேலும் பயிற்சி தேவை என்பது தெரியவந்தது. அதன் அடிப்படையில் ஒரு நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. அப்பயிற்சிக்கான கட்டகம் உருவாக்கி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது. அதனடிப்படையில் பயிற்சியில் கலந்துரையாடி வினாக்கள் பற்றிய ஐயங்கள், தீர்வுகள் பகிர்ந்துகொள்ளப்பட்டன.

### பயிற்சிக் கட்டகம்

**மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்**
**இராணிப்பேட்டை, வேலூர் மாவட்டம்.**
**செயலாய்வுக்கான பயிற்சிக் கட்டகம்**

**தமிழ்ப் பட்டதாரி ஆசிரியர்கள் பாடப் பகுதிகளுக்கான உயர்நிலைச் சிந்தனை வினாக்கள் உருவாக்கும் திறனை மேம்படுத்துதல்**

**ஆய்வாளர்**
**இரா.மணிமாலா எம்.ஏ.,எம்.எட்., எம்.பில்.,**
**விரிவுரையாளர்,**
**மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,**
**இராணிப்பேட்டை.**

### அறிமுகம்

“இருப்பதில் சிறந்தவற்றைக் குழந்தைகளுக்கு வழங்க மனித இனம் கடன்பட்டுள்ளது” என ஐ.நா.சபை, 1959 நவம்பர் 20 இல் பிரகடனப்படுத்தியுள்ளது. உயிருடன் வாழ, ஆரோக்கியமான உடல், மனவளர்ச்சிபெற, பாதுகாப்புடன் வாழ, தன் எண்ணங்களை வெளிப்படுத்தக் கூடிய கருத்து சுதந்திரமுள்ள சூழலில் வாழ என்று பலவகையான உரிமைகள் குழந்தைகளுக்காக உலக அளவில் வரையறுக்கப்பட்டுள்ளது.

“உலகில் இரண்டு புனிதமான இடங்கள் உள்ளன. ஒன்று தாயின் கருவறை, மற்றொன்று ஆசிரியரின் வகுப்பறை” என்பது ஆன்றோர் மொழியாகும். ஒரு குழந்தை தாயின் கருவறையில் உடல், உயிர் வளர்ச்சியையும், ஆசிரியரின் வகுப்பறையில் அறிவு,

ஆற்றல் மற்றும் வாழிவியல் திறன்களையும் பெறுகின்றது. சராசரியாக ஆசிரியர்களும், மாணவர்களும் தினமும் 6 மணி நேரம் – ஆண்டில் 1000 மணிநேரம் நேரடியாக சந்தித்துக் கொள்கின்றனர்.

பள்ளியே ஒரு வீடு என்ற சந்தோசமான, பாதுகாப்பு உணர்வினை தரும் பள்ளி அமைவிடமும், அழகான, வசதியான வகுப்பறைகளும், மனநிறைவைத் தரும் கற்றல் அனுபவங்களை வழங்கும் மகிழ்ச்சியான வகுப்பறை சூழலும், அன்பும் பரிவும் கொண்ட ஆசிரியர்களும் ஒத்துழைப்பு உணர்வுடன் பழகும் மாணவர்களும் ஒரு மாணவனின் கற்றல் அடைவை, பொருத்தப் பாட்டினை ஒருங்கிணைந்த ஆளுமை வளர்ச்சியினை தீர்மானிக்கும் காரணிகளாக விளங்குகின்றன. மாணவர்களின் உணர்வுச் சமநிலையைக் கற்றல் அடைவுகள் ஆசிரியர்களின் வகுப்பறை மேலாண்மை மற்றும், செயல் திறன் போன்றவை பள்ளியின் அமைவிடம், வசதிகள், வளங்கள், உறவு போன்ற காரணிகளால் நிர்ணயம் செய்யப்படுகின்றது.

பாடப்பொருள் அளவை வரையறுத்துக்கொண்டு கற்றல் விளைவைக் குறிப்பிட்ட கால அளவில் எழுதுவதற்கு வகுத்துக்கொண்ட வினாக்களுக்கு விடைதரும் செயல் தேர்வு எனப்படும். **தேர்வு** என்பது, கற்பவரைப் பற்றியும் கற்பிப்பவரைப் பற்றியும் போதுமான விவரங்களை அறிந்துகொள்ளும் நடைமுறையாகும். பொதுவாக, தேர்வுமுறை என்பது மாணவர்களை ஓரளவு ஊக்குவிக்கவும், போட்டி மனப்பான்மையை வளர்க்கவும், குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் பிழையின்றி எழுதும் பயிற்சி பெறவும், பிழை திருத்தம் செய்யவும், தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவும், தனது நிறை – குறைகளை தானே கண்டறியவும் உதவுகிறது.

தேர்வின் முக்கிய நோக்கங்கள், அனைத்துப் பாடங்களையும் மாணவர்கள் கற்றறிந்துள்ளனரா என அறிவதும், பெற்றோருக்கு முன்னேற்ற அறிக்கை தயாரித்து அனுப்புவதுமாகும். நினைவாற்றலை வளர்க்கவும், சீரானவிடை எழுதும் வல்லமை பெறவும் இம்முறை உதவுகிறது எனலாம்.

**உயர்நிலைத் திறன்கள்**

பாடப் பகுதியிலோ அல்லது பாடப் பகுதி சார்ந்தோ ஒரு பத்தியைக் கொடுத்து அதற்கான வினாக்களை உருவாக்கி விடையளிக்கச் செய்தல் அல்லது வினாக்களும் கொடுத்து விடையளிக்கச் செய்தல். நேரடியான வினாக்களைத் தவிர்க்க வேண்டும். மாணவர்கள் பாடப் பகுதியின் பத்தியின் கருத்தைப் புரிந்துகொண்டு விடையளிக்கும் வகையில் வினாக்கள் அமைத்தல் வேண்டும்.

மொழியைக் கற்றலின் முதன்மை நோக்கம் அம்மொழியைப் பயன்படுத்தும் திறனைப் பெறுவதாகும். மொழியை முறையாகப் பயன்படுத்த அடிப்படைத் திறன்களைப் பெற்றிருக்க வேண்டும். அடிப்படைத் திறன்கள் வாழ்க்கைச் சூழலில் முழுமையாகப் பயன்படுவனவாகும்.

இத்திறன்கள் பெரும்பாலும் பல்வேறு நிலைகளில் கருத்துப் பரிமாற்றய்களுக்கே பெரிதும் உறுதுணையாவன. ஒரு மொழியோடு ஒன்றி வாழ்வதற்கும் ஒருவர் தாம் பெற்றமொழிப் பயனை பிறரும் பெற வைப்பதற்கும் மொழியில் உயர்நிலைத் திறன்கள் உதவுகின்றன.

- இத்திறன்கள் பல்வேறு நிலைகளில் கருத்துப் பரிமாற்றங்களுக்கே பெரிதும் உறுதுணையாவன. ஒரு மொழியோடு ஒன்றி வாழ்வதற்கும் ஒருவர் தாம் பெற்றமொழிப் பயனைப் பிறரும் பெற வைப்பதற்கும் மொழியில் உயர்நிலைத் திறன்கள் உதவுகின்றன.

- இந்த உயர்நிலைச் சிந்தனைத்திறனானது கற்றல்-கற்பித்தலில் முக்கிய விளைவை ஏற்படுத்துகிறது. சான்றாக, ஒரு வகுப்பறை என்பது அடிப்டைத்திறன், உயர்சிந்தனைத்திறன் உடைய மாணவர்களால் ஆனது. அவ்விரண்டு வகையான மாணவர்களுக்கெனத் தனித்தனியாக வினாக்கள் உருவாக்குவது என்பது ஆசிரியரின் கடமையாகும்.


- இதனடிப்படையில் உயர்நிலைச்சிந்தனை வினாக்கள், உயர்நிலைச் சிந்தனைத்திறன் மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு மதிப்பிடப்படுகின்றன. காரண-காரிய தொடர்பு, கூற்றின் உண்மை அறிதல், சரியான-சரியில்லாதவற்றைத் தேர்ந்தெடுத்தல், ஒப்புமை இல்லாததைக் கண்டறிதல், சூழல் வினாவிடை, பல்தெரிவு வினா, கட்டுரைகள், கடிதங்கள் எனப்பல வகைகள் உயர்நிலைச் சிந்தனைத்திறனுக்கான வகைமையாகின்றன.

**உயர்நிலைச் சிந்தனைத்திறன்**

- சிந்தனைத் திறன்களுள் ஒன்று
- கல்விக்கான கருத்தியல்

இக்கற்றல் வகைப்பாட்டினை, அமெரிக்கக் கல்வி உளவியலாளரான பெஞ்சமின் ப்ளூம் என்பவர் ஆய்ந்தறிந்தார்

அடிப்படைச் சிந்தனைத்திறன்களை ஆராய்ந்த இவர், அதன் மேம்பாடாக உயர்நிலைச் சிந்தனைத் திறன்களை 1956 ஆம் ஆண்டு வடிவமைத்து அறிவித்தார். உயர்நிலைச் சிந்தனைத்திறன் என்பது கூர்சிந்தனைத்திறனை மையப்படுத்துவதாகும்.




**அறிவு**

- புளூமின் வகைபிரித்தல்

அறிவு என்பது என்பது முதல் நிலை. இங்கு அங்கீகரிப்பது அல்லது உண்மை, சொற்கள், அடிப்படைக் கருத்துகள் அல்லது பதில்களை நினைவில் கொள்வதாகும். இதில் மாணவர்கள் புரிந்து கொள்ளாமல் மனப்பாடம் செய்து கற்றுக்கொள்வதைக் குறிக்கிறது. இது மற்ற அனைத்து புலனுணர்வுத் திறன்களுக்கான அடித்தளமாகும்.

- இதன் பண்புகள் பின்வருமாறு:
- பிரத்தியேக அறிவு - சொற்களஞ்சியம், குறிப்பிட்ட உண்மைகள்
- மரபுகள், போக்குகள் மற்றும் வரிசை முறைகள், வகைப்பாடுகள் மற்றும் வகைகளைக் கையாள்வதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகள் பற்றிய அறிவு

**அறிதல்**

அறிதல் என்பது கற்ற ஒன்றை நினைவில் நிறுத்தும் திறனாகும். கற்பிப்பின்வழி, கற்போர் நினைவிலிருந்து விடையளிக்கத் தக்க வகையில் அமைக்கப்படும் வினாக்களாகும். விடையளிப்பது.

இனங்காண், பெயரிடு, வரையறு, பட்டியலிடு, பொருத்து, தேர்ந்தெடு

எடுத்துக்காட்டு

பெயர்ச்சொல் என்றால் என்ன?

குமரகுருபரர் படைத்தளித்த சிற்றிலக்கியங்கள் யாவை?

மாணவர்கள் தாம் கற்றறிந்த இலக்கிய வரியின் ஆசிரியரை நினைவு கூர்வதைக் குறிப்பதாக அமைக்கப்பட்ட வினா இது. அறிதல் ( நினைவாற்றல் ) எனும் ஆற்றலை இவ்வினா அளிக்கிறது.

**புரிதல்**

புரிந்துகொள்ளுதல் என்பது உண்மை மற்றும் கருத்துக்களைப் புரிந்துகொள்வதை நிரூபிப்பதன் மூலம் ஒழுங்கமைத்தல், சுருக்கமாகக் கூறுவது, மொழிபெயர்ப்பது, பொதுமைப்படுத்துதல், விளக்கங்களைக் கொடுப்பது மற்றும் முக்கிய யோசனைகளைக் குறிப்பிடுவது. இதில் ஒருவர் தனது கற்றலை வெவ்வேறு சூழலுக்கு ஏற்ப பயன்படுத்த முடியும்.

**ஒரு செய்தியின் தன்மைபற்றிய அறிவுநிலை புரிதல் ஆகும். பாடலுக்குப் பொருள் சொல்லுதல், கருத்துரை அமைத்தல், சொல்நயம், பொருள் நயம் உரைத்தல், மொழிபெயர்த்தல் முதலியன புரிந்துகொள்ளல் என்னும் திறனால் வெளிப்படும்.**

வகைப்படுத்து, விவரி, தொகு, மாற்று, விளைவு கூறு, வேறுபடுத்து.

**எடுத்துக்காட்டு**

**“நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி” எனும் பழமொழி கூறுவது யாது?**

ஐம்பூதங்களின் சேர்க்கையாக தொல்காப்பியர் கூறுவதை எழுதுக.

**பயன்பாடு**

**பயன்பாடு என்பது புதிய சூழ்நிலைகளில் சிக்கல்களைத் தீர்க்க அறிவைப் பயன்படுத்துவதை உள்ளடக்கியது. பெற்ற அறிவை பிறிதொரு சூழலில் எடுத்தாளுவதே பயன்படுத்துதல் ஆகும். எதிர்கொண்ட சிக்கலைக் கூர்ந்து கவனித்து அதிலுள்ள கூறுகளைக் கண்டறிந்து, அதற்கேற்ப மாற்றியமைத்தோ வகைப்படுத்தியோ தீர்வுக்குரிய பொருத்தமான முறைகளைப் பயன்படுத்தி அச் சிக்கலை விடுவிப்பது பயன்படுத்துதல் திறனாகும்.**

**இது பெற்ற அறிவு, உண்மைகள்**, பெறப்பட்ட அறிவு, நுட்பங்கள் மற்றும் விதிகளைப் பயன்படுத்துவதன் மூலம் புதிய சூழ்நிலைகளில் சிக்கல்களைத் தீர்ப்பது. சிக்கல்களைத் தீர்ப்பதற்கும், இணைப்புகள் மற்றும் உறவுகளை அடையாளம் காண்பதற்கும், புதிய சூழ்நிலைகளில் அவை எவ்வாறு பொருந்தும் என்பதற்கும் கற்றவர்கள் முன் அறிவைப் பயன்படுத்த முடியும்.

எடுத்துக்காட்டு

பெயர்ச்சொல், வினைச்சொல்லை ஓர் எடுத்துக்காட்டுடன் எழுதுக.

உடலோம்பல்- இச்சொல்லைப் பிரித்து புணர்ச்சிவிதி எழுதுக.

**பகுப்பாய்வு**

பகுப்பாய்வானது தகவல்களை, கூறுகளைப் பாகங்களாக ஆராய்வது மற்றும் பகுப்பது. பாகங்கள் ஒவ்வொன்றும் எவ்வாறு தொடர்பு கொள்கின்றன என்பதைத் தீர்மானித்தல், நோக்கங்கள் அல்லது காரணங்களை அடையாளம் காண்பது, அனுமானங்களை உருவாக்குதல் மற்றும் பொதுமைப்படுத்துதல்களை ஆதரிப்பதற்கான ஆதாரங்களைக் கண்டறிதல் ஆகியவை அடங்கும். அதன் பண்புகள் பின்வருமாறு:

- கூறுகளின் பகுப்பாய்வு
- உறவுகளின் பகுப்பாய்வு
- அமைப்பின் பகுப்பாய்வு

  எடுத்துக்காட்டு

  படித்த மாணவன் – இச்சொல் எவ்வகை பெயரெச்சம் என விளக்குக.

  பிறிதுமொழிதல் அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**தொகுப்பு**

தொகுப்பு என்பது பல்வேறு கூறுகளிலிருந்து ஒரு அமைப்பு அல்லது வடிவத்தை உருவாக்குவதை உள்ளடக்குகிறது. இது ஒரு முழுமையை உருவாக்குவதற்கான பகுதிகளை ஒன்றாக இணைக்கும் செயலையும் குறிக்கிறது அல்லது ஒரு புதிய அர்த்தத்தை உருவாக்க தகவல்களின் துண்டுகளை ஒன்றாக இணைக்கிறது.

இதன் பண்புகள் பின்வருமாறு:

- ஒரு தனிப்பட்ட தகவல் தொடர்பினை ஏற்படுத்துதல்
- ஒரு திட்டத்தின் உற்பத்தி, அல்லது முன்மொழியப்பட்ட செயல்பாடுகள்
- சுருக்க உறவுகளின் தொகுப்பின் வழித்தோன்றல்
- இணை, உருவாக்கு, பொது வடிவாக்கு, வடிவமை, இணைத்துருவாக்கு, கட்டமைப்பை மாற்றி ஒழுங்கமை, திருந்திய வடிவங்கொடு.

  எடுத்துக்காட்டு

  திருக்குறள் பற்றி நீ அறிந்த செய்திகளை எழுதுக.

  தன்னம்பிக்கையே உயர்வு தரும் என்பதனை நீங்கள் அறிந்த கருத்துருவுடன் நிறுவுக.

**மதிப்பீடு**

மதிப்பீடு என்பது ஒரு நிலைமையின் இயல்பினையும் உண்மைப் பயன்களையும் ஆராய்ந்து முடிவுக்கு வருதலாகும். இது தகவல்களைப் பற்றிய தீர்ப்புகள், யோசனைகளின் செல்லுபடியாகும் தன்மை அல்லது ஒரு அளவுகோலின் அடிப்படையில் பணியின் தரம் ஆகியவற்றைப் பற்றிய கருத்துக்களை முன்வைத்து பாதுகாப்பதை உள்ளடக்குகிறது.

- அதன் பண்புகள் பின்வருமாறு:
- உள் ஆதாரங்களின் அடிப்படையில் தீர்ப்புகள்
- வெளிப்புற அளவுகோல்களின் அடிப்படையில் தீர்ப்புகள்
- முடிவு கூறு, குறைநிறை விளக்கு, ஒப்பிட்டுரை, ஆய்ந்து முடிவுகூறு, தனிச்சிறப்புகளை எடுத்து விளக்கு, வேறுபட்ட விளக்கம் கொடு, சான்றுடன் நிறுவு.

  எடுத்துக்காட்டு

  நிலத்தின் வளத்தைப் பாதுகாக்க வேண்டிய சூழல் ஏற்படக் காரணங்கள் யாவை? அதற்காக மேற்கொள்ள வேண்டியவை எவை?

  எட்டாம் வகுப்பு படிக்கும் நீங்கள் போதுமான கற்றல் அடைவினைப் பெற்றுள்ளீர்களா? ஆம் / இல்லை எனில் அதற்கான காரணங்களைப் பட்டியலிடுக.

அறிதல், புரிதல், பயன்படுத்துதல், பகுத்தல், தொகுத்தல், மதிப்பிடல் ஆகிய கூறுகளுள் பகுத்தல், தொகுத்தல், மதிப்பிடல் ஆகிய மூன்றும் **திறன்** எனப்படும். இத்திறன் அடிப்படையில் உருவாக்கப்படும் வினாக்கள் உயர்நிலைச் சிந்தனை வினாக்களாகும்.

6,7,8 ஆம் தமிழ்ப் பாடநூல்களின் கற்றல் நோக்கங்களின் அடிப்படையில் வினாக்களைப் புரிந்துகொண்டு ஆசிரியர்கள் துணையுடன் மாணவர்கள் பெற வேண்டிய கற்றல் விளைவுகள் கீழ்க்காணுமாறு கொடுக்கப்பட்டுள்ளது.

602. தாங்கள் பார்த்த, கேட்ட உள்ளூர் சமூக நிகழ்வுகள், செயல்பாடுகள், சடங்குகள் போன்றவற்றைப் பற்றித் தயக்கமின்றி வினா எழுப்பவும் கலந்துரையாடவும் செய்தல்.

711. படித்தவற்றைப் பற்றிச் சிந்தித்து வினாக்கள் எழுப்பி அவற்றை மேலும் சிறப்பாகப் புரிந்துகொள்ள முயலுதல்.

803. படித்தவற்றைப் பற்றிச் சிந்தனை செய்து வினாக்கள் எழுப்பிப் புரிதலை மேம்படுத்திக்கொள்ளல்.

808. ஒரு கட்டுரையைப் படித்த பின்னர் அதன் சமூக மதிப்புகள் குறித்துக் கலந்துரையாடல், சில வினாக்களுக்கு விடை காண முற்படல்.

தமிழ்மொழியின் கற்றல் விளைவுகள் ஒன்றோடொன்று தொடர்புடையவை மற்றும் அவை மாணவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மொழித் திறன்களைப் பெறவேண்டும் என்பதையும் சுட்டுவனவாக உள்ளன. ஒரு கட்டுரையைக் கேட்டல் அல்லது படித்தல் திறனுடன், அதுபற்றி மாணவர்கள், ஒருவரிடம் எதிர்வினையை வெளிப்படுத்தவும், வினாக்கள் எழுப்பவும் திறன் பெறுதல் வேண்டும். மேலும் இதனோடு தொடர்புடைய பேசுதல் மற்றும் கேட்டல் திறன்களோடு தொடர்புபடுத்தும் திறன் பெற்றிருத்தல் வேண்டும். எதிர்வினை வினாக்கள், குறிப்புரைகள் போன்றவை எழுத்து வடிவிலும் அளிக்கலாம்.

பாடங்கற்பிப்புத் திட்டத்தினை எழுதும்பொழுதே அப்பாடத்திற்கான உயர்நிலைத் திறன் வினாக்களை ஆசிரியர்கள் தயாரித்துக்கொள்ளலாம். வினாக்களே மாணவர்களின் கற்றலை வெளிக்கொணர்வதற்கும் கற்றல் நிலைபெறுவதற்கும் அடிப்படையாக அமைகிறது. ஆசிரியர்கள் வினாக்களை உருவாக்கும் திறனை மேம்படுத்திக்கொள்வதால் மாணவர்கள் சொல்லாடல் மற்றும் சொந்த நடையில் விடையளிக்கும் திறன் வளரும்.

வகுப்பறையில் பாடப்பொருளைக் கற்பித்தபின் ஆசிரியர்களால் வினவப்படும் வினாக்கள் மாணவர்களின் கற்றலில் உயர்நிலைச் சிந்தனையைப் பயன்படுத்தி பதிலளிக்கக் கூடியதாக இருப்பின் கற்றல் நிலைத்திருக்கும். அத்துடன் மாணவர்கள் தங்கள் சொந்த நடையில் விடையளிக்கவும் தன்னம்பிக்கையுடன் படிக்கவும் வழிவகுக்கும். வினாக்கள் தயாரிப்பது ஒரு சிறந்த கலை. அக்கலையை ஆசிரியர்கள் தன்வயப்படுத்திக்கொண்டால் அக்கலை அவர்களைப் பிரியாது மாணவர்களையும் ஈர்க்கும் என்பதில் ஐயமில்லை.

## 4.5 இடை நிகழ்வுகள்

### முன்தேர்வு மற்றும் பயிற்சி

திருப்பத்தூர் ஒன்றியத்தில் பணியாற்றும் பதினைந்து தமிழ்ப் பட்டதாரி ஆசிரியர்களின் உரைநடைப் பகுதிகளுக்கான உயர்நிலைச் சிந்தனை வினாக்களை உருவாக்கும் திறனை மேம்படுத்துத்துவதற்காக வினாத்தாள் தயாரித்து முன் தேர்வு வைக்கப்பட்டது. அதன் அடிப்படையில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும்பொருட்டு பயிற்சிக் கட்டகம் தயாரிக்கப்பட்டு ஒரு நாள் பயிற்சி அளிக்கப்பட்டது.

பயிற்சியின் போது ஆசிரியர்கள் தங்களது ஐயங்களைக் கலந்துரையாடல் வாயிலாக தெளிவு பெற்றனர். தாங்கள் இதுவரை மாணவர்களைத் தேர்வுக்குத் தயார்படுத்தும் நோக்கோடு அறிதல், புரிதல் மற்றும் பயன்படுத்துதல் அடிப்படையிலேயே வினாக்கள் எழுப்பும் வழக்கத்தைப் பின்பற்றுவதாகப் பகிர்ந்துகொண்டனர். அவர்களுள் ஒரு சிலர் அப்படி வினாக்கள் எடுப்பதும் தேர்வுக்குத் தயார்படுத்துவதுமே அவசியம் என்றும் வாதிட்டனர். மாணவர்கள் படைக்கும் திறனையும் கருத்துகளை ஆளும் வளத்தினையும் பெற்றால் அவர்களால் தேர்வில் சிறப்பாகப் பதிலளிக்க முடியும் என்ற கருத்து விளக்கப்பட்டது.

### முதல் வாரம்

பயிற்சி முடித்தபின் அடுத்த வாரத்தில் ஆசிரியர்களிடம் ஏதேனும் ஒரு பாடத்திற்கு

பத்து வினாக்கள் தயாரித்து அவ்வினாக்களை மாணவர்களிடம் விடையளிக்மாறு செய்ய பணிக்கப்பட்டது. மாணவர்களையும் ஒரு சில வினாக்கள் வினவ வாய்ப்பளிக்கப்பட வேண்டுமென்றும் வழிகாட்டப்பட்டது.

**பள்ளிப் பார்வை**

பயிற்சிக்குப் பின் நான்கு பள்ளிகளைப் பார்வையிட்டு அங்கு நடைபெறும் வகுப்பறைச் செயல்பாடுகள் உற்றுநோக்கப்பட்டன. பயிற்சி முடித்து ஆசிரியர்கள் வகுப்பறையில் பாடங்களை நடத்த முற்படும் முன்னரும் பாடங்களை நடத்தி முடித்த பின்னரும் மாணவர்களிடம் வினாக்கள் வினவுவதில் சிறிது மாற்றம் காணப்பட்டது. அவர்கள் நேரடியான வினாக்களைத் தவிர்த்து மாணவர்கள் பாடப்பொருளைப் புரிந்துகொண்டு விடையளிக்க முற்பட்டனர். அப்பொழுதும் ஒரு சில வினாக்கள் நேரடியாகவும் கேட்கப்பட்டதைத் தவிர்க்க முடியவில்லை. உயர்நிலைத் திறன் வினாக்களுக்கு விடையளிப்பதில் மாணவர்கள் முழுமையாக ஈடுபடவில்லை. ஆசிரியர்களின் தூண்டுதலால் மாணவர்கள் விடையளிக்க முயற்சித்தனர்.

பள்ளிப்பார்வையின் போது ஆசிரியர்களின் வினாக்கள் வினவும் முறையில் சிறிது மாற்றம் இருந்ததே இவ்வாய்வினை ஓரளவிற்கு நடைமுறைப்படுத்த நல்ல வாய்ப்பாக இருக்கிறது. முன்தயாரிப்படன் எழுதப்பட்ட வினாக்களே உயர்நிலைத் திறன்களைக் கொண்டதற்கான கட்டமைப்பு இருக்கிறது. தயாரிப்பில்லாத வினாக்கள் மீண்டும் அறிதல், புரிதல், பயன்படுத்துதலை உள்ளடக்கியதாகவே இருக்கிறது என்பதை ஆசிரியர்கள் வாயிலாகவே தொகுக்கப்பட்டது.

**மாதச் செயல்பாடுகளில் ஆசிரியர்களின் முன்னேற்றம்**

முதல் பள்ளிப் பார்வையை முடித்து இரண்டாவது முறையாக வகுப்பறையைப் பார்வை செய்தபோது ஆசிரியர்கள் உயர்நிலை வினாக்களை தேர்ந்தெடுத்து மாணவர்களிடம் வினவியபோது வினாக்களுக்கான மாணவர்களின் விடையளிக்கும் திறன் அதிகரித்திருப்பதைக் காண முடிந்தது.

## 4.6 பின்தேர்வு

ஆசிரியர்கள் தங்கள் பயிற்சியில் பெற்ற அனுபவத்தைக்கொண்டு வகுப்பறையில் பாடம் தொடங்குவதற்கு முன்பும் பாடம் நடத்தி முடித்த பின்னரும் மாணவர்களிடம் ஆளல், மதிப்பீடு செய்தலை உள்ளடக்கிய உயர்நிலைத் திறன் வினாக்களை வினவி விடையளிக்கச் செய்தனர். ஒரு சில வினாக்களுக்கு ஆசிரியரின் பங்களிப்பும் தேவைப்பட்டதாகத் தெரிவித்தனர். மாணவர்களைத் தங்களுக்குள் வினாக்கள் கேட்கச் செய்தனர். எளிய வினாக்களையே கேட்டுப் பழகிய மாணவர்கள் உயர்நிலை திறன் வினாக்களைக் கேட்பதில் முயற்சி செய்தனர். அவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர்கள் வினாக்கள் தயாரிப்பில் தங்களை இணைத்துக்கொண்டனர். அதனடிப்படையில் அவர்களுக்குப்

பின்தேர்வு வைக்கப்பட்டது. அவற்றின் அடிப்படையில் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

## 5. ஆய்வு மதிப்பிடல்

**முன்தேர்வு மற்றும் பின்தேர்வின் மதிப்பெண்களைப் பெயர் பட்டியலில் பதிவுசெய்யப்பட்து.**

**மதிப்பெண் பட்டியல்**

| வ. எண் | ஆசிரியர்களின் பெயர் மற்றும் முகவரி | முன் தேர்வு | பின் தேர்வு |
|---|---|---|---|
| 1 | R. உமா, HM ஊ.ஒ.ந.நி. பள்ளி, அகரம். | 40 | 64 |
| 2 | J. ஜெயந்தி மரகதம், HM , ஊ.ஒ.ந.நி. பள்ளி, கதிரிமங்கலம். | 40 | 66 |
| 3 | G. வள்ளி, HM , ஊ.ஒ.ந.நி. பள்ளி, புரிகமானிமிட்டா. | 32 | 52 |
| 4 | R. மாதவன், HM , ஊ.ஒ.ந.நி. பள்ளி கவரையுர் | 36 | 62 |
| 5 | G. திருப்பதி, B.T ஊ.ஒ.ந.நி. பள்ளி, லாலாபேட்டை | 36 | 58 |
| 6 | S. முனியப்பன், B.T, ஊ.ஒ.ந.நி.பள்ளி ஜம்மனப்பதூர் | 36 | 54 |
| 7 | S. ராஜலட்சுமி, HM , ஊ.ஒ.ந.நி.பள்ளி, பசலிக்குட்டை | 44 | 64 |
| 8 | K. சுனிமோல் மேன்வெல், HM ஊ.ஒ.ந.நி.பள்ளி, மேல்பட்டு. | 32 | 56 |
| 9 | S. சசிகலா, HM , ஊ.ஒ.ந.நி.பள்ளி, தா.கிருஸ்ணாபுரம். | 44 | 66 |
| 10 | V. பிரமிளா, HM , ஊ.ஒ.ந.நி.பள்ளி, கூடப்பட்டு | 36 | 64 |
| 11 | J. பிளாரன்ஸ் சர்மிளா HM , ஊ.ஒ.ந.நி.பள்ளி, நாராயணபுரம் | 30 | 58 |
| 12 | G. லோகநாதன், B.T , பழைய முஸ்லிம் ஆண்கள்.ந.நி.பள்ளி, | 56 | 80 |
| 13 | M.சாந்தி, B.T ஊ.ஒ.ந.நி.பள்ளி, திருமால் நகர். | 30 | 66 |
| 14 | M.சாந்தி , B.T ஊ.ஒ.ந.நி.பள்ளி, பிச்சானூர் | 30 | 68 |
| 15 | M. சன்மதி, HM ஊ.ஒ.ந.நி.பள்ளி, மாக்கனூர் | 40 | 66 |
| | **மொத்தம்** | **562** | **944** |
| | **சதவிகிதம்** | **38** | **63** |

### 5.1 புள்ளியியல் ஆய்வின் அடிப்படையில் விளக்கம் அளித்தல்


முன்தேர்வுக்குப் பயன்படுத்தப்பட்ட வினாத்தாளே பின்தேர்வுக்கும் பயன்படுத்தப்பட்டது. பின்தேர்வு விடைத்தாள்களைப் பகுத்தாய்ந்தபோது முன்தேர்வைவிட ஆசிரியர்கள் உயர்நிலைத் திறன் வினாக்கள் எழுதுவதில் பயிற்சி பெற்று பின்பற்றியதால்


மாணவர்களின் கற்றல் அடைவு மேம்படுத்தப்பட்டிருப்பதைக் காண முடிகிறது. மாணவர்களிடம் எழுபப்படும் வினாக்கள் அவர்களின் கற்றலை வெளிப்படுத்த வாய்ப்பளித்ததுடன் சிந்தனையைத் தூண்டுவதாக இருக்கிறது. பாடத்தைக் கற்பிக்கத் துவங்குவதற்கு முன்னால் அதைப்பற்றிய முன்னறிவினை ஆசிரியர்கள் சோதிப்பதற்காக வினவப்படும் வினாக்கள் மாணவர்களின் கற்றல் ஆர்வத்தை அதிகரிப்பதாக ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

முன்தேர்வு பின்தேர்வுப் பகுப்பாய்வில் முன்தேர்வில் 38 சதவீதமும், பின்தேர்வில் 63 சதவீத மதிப்பெண்களும் பெற்றிருந்தனர். முன்தேர்வு பின்தேர்வு இரண்டையும் நோக்கும்போது செயலாய்வில் பயிற்சியின்போது விளக்கப்பட்ட கருத்துகளையும், வழங்கப்பட்ட பயிற்சிக் கையேட்டில் உள்ள உத்திகளையும் அவர்கள் வகுப்பறையில் கற்பித்தலின்போது பயன்படுத்தியுள்ளனர். ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சியின் தாக்கம் மாணவர்களைச் சிறப்பாகச் சென்றடைந்துள்ளதாக விளக்கம் அளிக்கின்றனர் ஆசிரியர்கள்.

வரைபடத்தில் முன்தேர்வுக்கும் பின்தேர்வுக்கும் மதிப்பெண் சராசரியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் உள்ளது.

## 5.2 தரவுகளைப் புள்ளியியல் ஆய்வுக்கு உட்படுத்துதல்






## 6. ஆய்வு முடிவுகள்

- பாடப்பகுதிகளைக் கற்பிக்கும் முன்னரும் கற்பித்த பின்னரும் ஆசிரியர்கள் அவற்றிற்குரிய வினாக்களைச் சிந்தித்து உருவாக்கும் திறனை மேம்படுத்தியுள்ளனர்.
- ஆசிரியர்கள் பாடப்பகுதிகளுக்கான உயர்நிலைத் திறன் வினாக்களை உருவாக்கும் திறனை மேம்படுத்தி மாணவர்களின் கற்றலுக்கு வழிகாட்டுகின்றனர்.
- ஆசிரியர்கள் தாங்கள் நடத்தப்போகும் பாடத்திற்கான உயர்நிலைத் திறன் வினாக்களை உருவாக்கி வினவுவதால் மாணவர்களின் கற்றல் ஆர்வம் அதிகரித்துள்ளது.
- ஆசிரியர்கள் வினாக்களைச் சிறப்பாக கட்டமைக்கும் திறனை மேம்படுத்திக்கொண்டதால் மாணவர்களும் வினாக்களுக்கு விடையளிக்கும் திறனை வளர்த்துக்கொள்ள முயற்சிக்கின்றனர்.

## 7. பின்னூட்டம்

- மாணவர்கள் தொடர்ந்து படித்துப் பார்க்காததால் ஆசிரியரின் கேள்வி மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவதாக இருப்பதால் பதிலளிக்க முயற்சிக்கின்றனர். ஆசிரியர் கற்பித்த பிறகு அவர் வினவும் வினாக்களுக்கு பதில் அளிப்பதில் மாணவர்களுக்குத் தயக்கம் உள்ளதை ஆசிரியர்களே தெரிவிக்கின்றனர்.
- புரிந்தவர்கள் தங்களுக்குத் தெரிந்தவற்றைத் தயக்கமில்லாமல் பதிலளிப்பதைக் காண முடிகிறது. ஆசிரியர் வினவும் வினாக்களுக்கு பதிலளிப்பதில் ஒரு சில மாணவர்கள் சிறப்பாகச் செயல்படுகின்றனர். சில மாணவர்கள் படித்தல் நேரத்தை

தேவையில்லாமல் பிறருடன் பேசுவதிலும் வேடிக்கைப் பார்ப்பதிலும் செலவிடுகின்றனர்.

- ஐந்து நிமிடத்திற்குமேல் தொடர்ந்து கேட்பதில் கவனச் சிதறல் ஏற்படுகிறது. தொடர்ந்து படிக்க வைத்தாலும் வினாக்கள் வினவினாலும் என்ன வினா கேட்டோம் என்பதில் தெளிவோ, கருத்துக்கோர்வையோ அவர்களிடம் இல்லை.
- படித்தல் திறன் குறைவாக உள்ள மாணவனை அதிக நேரம் ஒதுக்கி வினாக்கள் கேட்பதில் ஆர்வமூட்டி விடையளிக்க வைத்தாலும் ஒரு வாரம் கழித்து அவனிடம் மீண்டும் தெளிவாகப் விடையளிக்க வைப்பதில் சிரமம் உள்ளது. இதற்குக் காரணம் அவன் நாள்தோறும் படிக்கும் பழக்கத்தைத் தொடர்வதில்லை.
- பொருளற்ற சொற்களைப் படிக்கும் போது எழுத்துகளின் ஒலி வடிவத்தை மாணவர்களால் தெளிவாக அறிந்து படிக்க முடிகிறது. அதேபோல் எழுத்துகளை மாற்றி கொடுத்துப் படிக்க வைப்பதிலும் அவர்களுடைய படித்தல் திறன் வலிமையாக்கப்படுவதை அறியமுடிகிறது.

ஒவ்வொரு நாளும் பாடக் கருத்துகள் தொடர்பான வினாக்களை வினவி அவர்களை எப்பொழுதும் சிந்தித்து விடையளிக்கச் செய்யும் நிலையிலேயே வைத்திருந்தல் வேண்டும். நூலைத்தாண்டி ஏதாவதொன்றைக் கொடுத்து புரிந்து படிக்க வைப்பதன் வாயிலாக வினவும் வினாக்களைப் புரிந்துகொண்டு விடையளிக்கும் திறனை சிறப்பாக்கலாம் என்பதும் இவ்வாய்வில் கண்டறியப்பட்டன

## 8. பிற்கால ஆய்வுக்கான வழிகாட்டுதல்கள்

ஆசிரியர்கள் உயர்நிலைத்திறன் வினாக்களை உருவாக்கும் திறனை மேம்படுத்திக்கொள்வதால் மாணவர்களின் புரிதல் மற்றும் கற்றல் ஆர்வம் அதிகரிக்கிறது**.** வகுப்பறையில் மாணவர்கள் கற்றலில் அதிக ஈடுபாடு காட்டுவதால் ஆசிரியர்களும் தங்கள் வினா எழுப்பும் திறனை மேம்படுத்திக்கொள்வதுடன் மாணவர்களின் கற்றல் விளைவுகளை நிலைப்படுத்த வேண்டியது அவசியம்**.** மாணவர்களின் கற்றல் விளைவுகளை அடையும் திறனானது அவர்களின் நிலையான கற்றலுக்கு வழிகாட்டுவதுடன் நம்பிக்கையுடன் படிக்கும் மனப்பான்மை அதிகரிக்கும்**.** ஆசிரியர்கள் தங்களின் வினாக்கள் தயாரிக்கும் திறனில் தொய்வு ஏற்பட்டால் மாணவர்களின் கற்றலிலும் அது பிரதிபலிக்கும்**.** ஆகையால் ஆசிரியர்கள் தங்களின் தயாரிப்புப் பணிக்கான காலத்தை ஏற்படுத்திக்கொண்டு **பாடத்தைக் கற்பித்தல் வேண்டும்**. படித்தல் திறன் என்பது தொடர்ந்து மாணவர்களிடையே மேம்படுத்த வேண்டிய வெளியிடும் திறன்களுள் ஒன்று. ஒவ்வொரு காலகட்டங்களிலும் புதிய பல உத்திகளை ஆசிரியர்கள் பின்பற்றி கற்பித்தல் பணியைச் சிறப்பாக்குகின்றனர். இருப்பினும் படித்தல் திறனுக்கென அதிக முக்கியத்துவமும் அதிக நேரமும் செலவழிக்காத நிலைகளில் அவற்றுள் தொய்வு ஏற்படுகிறது. அவற்றினை

முடிந்தவரை களைந்து புத்துணர்ச்சியோடு மாணவர்களைப் படித்தல் திறனில் மேம்பாடடையச் செய்ய இவ்வாய்வு வழிகாட்டுகிறது. எழுத்துகளை வரிசையின்றி கலந்து கொடுத்தும் பொருளற்ற சொற்களைப் படிக்க வைப்பதாலும் எழுத்துகளின் ஒலி மற்றும் வரிவடிவங்களை மாணவர்கள் தெளிவாக அறிந்துகொள்வர். இவ்வாய்வின் பயிற்சிக் கட்டகத்தைப் பயன்படுத்தி பிற ஒன்றியங்களிலும் மாணவர்களின் படித்தல் திறனை மேம்படுத்தலாம்.

## 9. ஆய்வு முடிவுகளைத் தொகுத்தல்

முன்தேர்வு பின்தேர்வுப் பகுப்பாய்வில் முன்தேர்வில் 38 சதவீதமும், பின்தேர்வில் 63 சதவீத மதிப்பெண்களும் பெற்றிருந்தனர். முன்தேர்வு பின்தேர்வு இரண்டையும் நோக்கும்போது செயலாய்வில் பயிற்சியின்போது விளக்கப்பட்ட கருத்துகளையும், வழங்கப்பட்ட பயிற்சிக் கையேட்டில் உள்ள உத்திகளையும் அவர்கள் வகுப்பறையில் கற்பித்தலின்போது பயன்படுத்தி உயர்நிலைத் திறன் வினாக்களை மாணவர்களிடம் வினவி அவர்களிடம் கற்றல் ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளனர். ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சியின் தாக்கம் மாணவர்களைச் சென்றுஅடைந்துள்ளது. அவர்கள் பாடங்களின் கருத்தை புரிந்துகொண்டு வினாக்களுக்கு விடையளிக்கும் ஆர்வம் கொண்டுள்ளதாக விளக்கம் அளிக்கின்றனர் ஆசிரியர்கள். மாணவர்களிடம் வினாக்களுக்கு விடையளிக்கும் திறனை வளர்க்க ஆர்வத்தை ஏற்படுத்துவதுடன் அதனைத் தொடர்ந்து கண்காணித்தும் வளமூட்டியும் வளர்க்க வேண்டிய கடமை ஆசிரியர்களுக்கு உள்ளது. மாணவர்களின் படித்தல் திறனை வளர்ப்பதில் இடையுறுகள் அதிகம் இடம்பெற்றுள்ளதால் அவற்றைக் களைய வேண்டியதும் நமது பொறுப்பாக உள்ளது.

## 10. பார்வை நூல்கள்


- தமிழ்மொழி கற்பித்தல் – தொடக்கக் கல்வி பட்டயப் பயிற்சி, முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை-6.
- உயர்நிலைத் திறன்கள் - கணினி நழுவங்கள் , குறுவள மையப் பயிற்சி, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், சென்னை
- நன்னூல் காண்டிகை உரை, ஆறுமுகநாவலர்
- எட்டாம் வகுப்பு தமிழ்ப் பாடநூல், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை – 6.

**பின் இணைப்புகள்**

**நிழற்படங்கள்**




**ஆசிரியர்கள் முன்தேர்வு எழுதுகின்றனர்.**




**பயிற்சியின்போது திருப்பத்தூர் ஒன்றிய கல்வி அலுவலர்கள் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் ஆசிரியர்கள் பயிற்சியைத் தெளிவாகப் பெற்று வகுப்பறைகளில் பயன்படுத்த வேண்டுமென அறிவுரை வழங்கினார்.**




**தமிழ்ப் பட்டதாரி ஆசிரியர்களுக்கான உயர்நிலை வினாக்கள் தயாரித்தல் ஒரு நாள் பயிற்சி**



ஊ.ஒ.ந.நி.பள்ளி, மாக்கனூர், திருப்பத்தூர் ஒன்றியம். வகுப்பறைச் செயல்பாடு.

**இராணிப்பேட்டை, வேலூர் மாவட்டம்.**

**செயலாய்வு முன்தேர்வு / பின்தேர்வு வினாத்தாள்**

**நேரம் – 60 நிமிடம்**

**மதிப்பெண் - 25**

1. தேர்வு என்றால் என்ன?
2. மதிப்பிடுதல் (மாணவர்களின் கற்றலை) என்றால் என்ன?
3. உயர்தொடக்க வகுப்புகளில் மாணவர்களிடம் வினாக்கள் வினவுதலைக் குறிப்பிடும் கற்றல் விளைவுகள் எவை?
4. உயர்நிலைச் சிந்தனை வினாக்கள் மாணவர்களின் எவ்வகையான ஆற்றல்களை ( கற்றல் கூறுகளை) வெளிப்படுத்தக் கூடியதாக அமைகிறது?
5. கீழ்நிலைச் சிந்தனை வினாக்கள் மாணவர்களின் எவ்வகையான ஆற்றல்களை ( கற்றல் கூறுகளை) வெளிப்படுத்தக் கூடியதாக அமைகிறது?
6. பின்வரும் பத்திகளைப் படித்து, உயர்நிலைச் சிந்தனை வினாக்கள் ஐந்தினை எழுதுக.

அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது கல்வி எனப்படும். மனிதர்களது வாழ்வில் உடலோம்பலுடன் அறிவோம்பலும் நிகழ்ந்து வரல் வேண்டும். அறிவோம்பலுக்குக் கல்வி தேவை. அக்கல்விப் பயிற்சிக்குரிய பருவம் இளமை என்பதை விளக்க வேண்டுவதில்லை. இது பற்றியே **இளமையில் கல்** என்னும் முதுமொழி பிறந்தது.

இந்நாளில் ஏட்டுக் கல்வியே கல்வி என்னும் ஒரு கொள்கை எங்கும் நிலவி வருகிறது. ஏட்டுக்கல்வி மட்டும் கல்வி ஆகாது. இந்நாளில் கல்வியென்பது பொருளற்றுக் கிடக்கிறது. குறிப்பிட்ட பாடங்களை நெட்டுருச் செய்து, தேர்வில் தேறிப் பட்டம் பெற்று, ஒரு தொழிலில் நுழைவதற்குக் கல்வி ஒரு கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது. நாளடைவில் அக்கல்விக்கும் வாழ்விற்கும் தொடர்பில்லாமல் போகிறது. இது கல்வியாகுமா?

ஏட்டுக் கல்வி மட்டுமன்றித் தொழிற்கல்வி முதலியனவும் கல்வியின் பாற்பட்டனவே. கல்வித்துறைகள் பல திறத்தன. அவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவர் இயல்புக்குப் பொருந்தியதாகத் தோன்றும். அப்பொருந்திய ஒன்றில் சிறப்பு அறிவு பெறவும் பிறவற்றில் பொது அறிவு பெறவும் அவரவர் முயல்வது ஒழுங்காகும். தொழில் நோக்குடன் கல்வி பயிலுதல் வேண்டா என்றும் அறிவு விளக்கத்தின் பொருட்டுக் கல்வி பயிலுதல் வேண்டும் என்றும் இயற்கை அன்னை எச்சரிக்கை செய்தவண்ணமிருக்கிறாள். அவ்வெச்சரிக்கைக்கு மாணாக்கர் செவி சாய்த்து நடப்பாராக. அறிவு விளக்கத்துக்கெனக் கல்வி பயின்று, அவ்வறிவை நாட்டுத் தொழில்துறைகளைப் புதிய முறைகளில் வளர்க்கப் பயன்படுத்துவாராக.

1.

2.

3.

4.

5.

7.பின்வரும் கடிதப் பகுதியைப் படித்து, உயர்நிலைச் சிந்தனை வினாக்கள் ஐந்தினை எழுதுக.

மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு,

வணக்கம். இந்தப் பூமிக்கு அணுக்கமாக உள்ள வானத்தை எப்படி வாங்கவோ விற்கவோ முடியும்? இவ்வாறு செய்ய வேண்டுமென்ற எண்ணமே வேடிக்கையாகத் தோன்றுகிறது. காற்றின் தூய்மையும் நீரின் உயர்வும் யாருக்கும் சொந்தமானவை அல்ல. அப்படியிருக்கையில் நீங்கள் அவற்றை எவ்வாறு விலைகொடுத்து வாங்க முடியும்?

இந்தப் பூமியின் ஒவ்வொரு துகளும் எம் மக்களுக்குப் புனிதமானதாகும். கூடவே, மின்னும் ஒளியுடைய ஒவ்வொரு ஊசியிலையும் எல்லாக் கடற்கரைகளும் கருமரங்களில் தவழும் பனித்துளிகளும் இன்னிசை எழுப்பித் திரியும் பூச்சி வகைகளும் எம் மக்களின் நினைவிலும் வாழ்விலும் மிகவும் புனிதமானவை. பாலூறும் மரத்திலிருந்து ஒழுகும் திரவம்கூட, செவ்விந்தியர்களின் நினைவுகளைச் சுமந்து நிற்கிறது.

எமது மக்கள் இந்தப் பூமியை எப்பொழுதும் மறப்பதேயில்லை. ஏனெனில் இதுவே எமக்குத் தாயாகும். நாங்கள் இந்த மண்ணுக்கு உரியவர்கள்; இந்த மண்ணும் எமக்குரியதாகும். இங்குள்ள நறுமணம் மிகுந்த மலர்கள் யாவும் எமது சகோதரிகள். மான்கள், குதிரைகள், கழுகுகள் போன்ற அனைத்தும் எமது சகோதரர்கள். மலை முகடுகள், பசும்புல்வெளிகளின் பனித்துளிகள், மட்டக் குதிரைகளின் உடல்சூட்டின் இதமான கதகதப்பு போன்றவையும் இங்குள்ள மனிதர்கள் எல்லாமும் ஒரே குடும்பம்.

வாஷிங்டனின் பெருந்தலைவர் எங்கள் நிலங்களை வாங்க விருப்பம் தெரிவித்துச் சொல்லி அனுப்பியபோது, நாங்கள் மனநிறைவுடன் வாழ எங்களுக்கென்று தனியிடம் ஒதுக்கித் தருவதாகவும் கூறியிருக்கிறார். எனவே, அவர் எங்களுக்குத் தந்தையாகவும் நாங்கள் அவருக்குப் பிள்ளைகளாகவும் ஆகிறோம். எனினும், இந்நிலமானது எங்களுக்கு மிகவும் புனிதமானது என்பதால் இதற்குச் சம்மதிப்பது என்பது மிகவும் இயலாத ஒன்றாகும். இந்நிலையில் எங்களுடைய நிலத்தை வாங்கும் உங்கள் திட்டத்தைப் பற்றிச் சிந்திப்போம்.

1.

2.

3.

4.
5.

**விடைக் குறிப்புகள்**

1. பாடப்பொருள் அளவை வரையறுத்துக்கொண்டு கற்றல் விளைவைக் குறிப்பிட்ட கால அளவில் எழுதுவதற்கு வகுத்துக்கொண்ட வினாக்களுக்கு விடைதரும் செயல் தேர்வு எனப்படும். **தேர்வு** என்பது, கற்பவரைப் பற்றியும் கற்பிப்பவரைப் பற்றியும் போதுமான விவரங்களை அறிந்துகொள்ளும் நடைமுறையாகும்.

**2.** மதிப்பீடு என்பது ஒரு நிலைமையின் இயல்பினையும் உண்மைப் பயன்களையும் ஆராய்ந்து முடிவுக்கு வருதலாகும். இது தகவல்களைப் பற்றிய தீர்ப்புகள், யோசனைகளின் செல்லுபடியாகும் தன்மை அல்லது ஒரு அளவுகோலின் அடிப்படையில் பணியின் தரம் ஆகியவற்றைப் பற்றிய கருத்துக்களை முன்வைத்து பாதுகாப்பதை உள்ளடக்குகிறது.

3. 602. தாங்கள் பார்த்த, கேட்ட உள்ளூர் சமூக நிகழ்வுகள், செயல்பாடுகள், சடங்குகள் போன்றவற்றைப் பற்றித் தயக்கமின்றி வினா எழுப்பவும் கலந்துரையாடவும் செய்தல்.

711. படித்தவற்றைப் பற்றிச் சிந்தித்து வினாக்கள் எழுப்பி அவற்றை மேலும் சிறப்பாகப் புரிந்துகொள்ள முயலுதல்.

803. படித்தவற்றைப் பற்றிச் சிந்தனை செய்து வினாக்கள் எழுப்பிப் புரிதலை மேம்படுத்திக்கொள்ளல்.

808. ஒரு கட்டுரையைப் படித்த பின்னர் அதன் சமூக மதிப்புகள் குறித்துக் கலந்துரையாடல், சில வினாக்களுக்கு விடை காண முற்படல்.

4. அறிதல், புரிதல், பயன்படுத்துதல், பகுத்தல், தொகுத்தல், மதிப்பிடல் ஆகிய கூறுகளுள் பகுத்தல், தொகுத்தல், மதிப்பிடல் ஆகிய மூன்றும் **திறன்** எனப்படும். இத்திறன் அடிப்படையில் உருவாக்கப்படும் வினாக்கள் உயர்நிலைச் சிந்தனை வினாக்களாகும்.

5. அறிதல், புரிதல், பயன்படுத்துதல் ஆகிய ஆற்றல்கள் மாணவர்களின் கீழ்நிலைத்திறன் சிந்தனைத்திறன் வினாக்களை அறிய பயன்படுபவையாகும்.

6.1. மேற்கண்டவற்றுள் எத்தகைய கல்வி கற்பது ஒழுங்கென்று குறிப்பிடப்படுகிறது. ஏன்?

2. தொழில் நோக்கு, அறிவு விளக்கம் – கல்விபெறும் இவ்விரண்டு முறைகளுக்கான வேறுபாடு என்ன?

3. கல்விக்கும் வாழ்வுக்கும் தொடர்பில்லாதவற்றை எப்படித் தவிர்க்கலாம்? ஏன்?

4. ஏட்டுக் கல்வி என்பதற்கு நீங்கள் அறிந்துள்ள விளக்கங்களை எழுதுக.

5. உடல் வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே என்ற உவமைக்கு நிகராக இப்பத்தியில் கொடுக்கப்பட்டுள்ள தொடர் எது? விளக்குக.

6. இப்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றுள் நீங்கள் எவ்வகையான கல்வியைக் கற்க விரும்புகிறீர்கள்?

7. உங்களுக்குத் தெரிந்த தொழில்களைக் குறிப்பிடுக. அவற்றை எவ்வாறெல்லாம் கற்றுக்கொள்ள முடியும் என்பதையும் எழுதுக.

8. பொது அறிவு, சிறப்பு அறிவு வேறுபடுத்தி எழுதுக.

7. 1. மனிதர்களும் மற்ற உயிரினங்களும் வாழ்வதற்கு அடிப்படையானவைகளுள் எவை பொதுவானவை? அதற்குக் காரணங்களாக நீங்கள் நினைப்பவற்றை எழுதுக.

2. தமிழர்கள் பூமியைப் பெண்ணாக பாவித்துக் கூறும் சொற்கள் எவை? ஏன் அவ்வாறு அழைக்கிறார்கள்?

3. இப்பத்தியின் வாயிலாக நீங்கள் உணர்ந்தவற்றை உங்கள் சொந்த நடையில் எழுதுக.

4. செவ்விந்தியர்கள் தங்கள் நிலத்தை விற்க நினைத்தார்களா? ஆம் / இல்லை. காரணம் எழுதுக.

5. பஞ்ச பூதங்களுள் எவற்றைப் பற்றியெல்லாம், எந்தெந்த இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. விளக்குக.


6. குடும்பம் என்ற சொல்லுக்கு நீங்கள் அறிந்த, உணர்ந்த, பார்த்த, பிறர் சொல்லி கேட்ட செய்திகளை விளக்கமாக எழுதுக.

7. தூய்மை, தெய்வீகம், பரிசுத்தம் ஆகிய பொருள்களைக் குறிக்கும் ஒரு சொல் இப்பத்தியில் உள்ளது. அது எந்த சொல்? இப்பத்தியில் எவ்வெவ்விடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது?

8. பூமி எவ்வாறெல்லாம் உருவானது என்பதைப் பற்றி நீங்கள் அறிந்தவற்றை எழுதுக.

**விடைத்தாள்கள் இரண்டின் நகல்கள்**

**முன்தேர்வு**



மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,


இராணிப்பேட்டை, வேலூர் மாவட்டம்.

செயலாய்வு முன்தேர்வு / பின்தேர்வு வினாத்தாள்

நேரம் – 60 நிமிடம்

1. தேர்வு என்றால் என்ன?
2. மதிப்பிடுதல் (மாணவர்களின் கற்றலை) என்றால் என்ன?
3. உயர்தொடக்க வகுப்புகளில் மாணவர்களிடம் வினாக்கள் வினவுதலைக் குறிப்பிடும் கற்றல் விளைவுகள் எவை?
4. உயர்நிலைச் சிந்தனை வினாக்கள் மாணவர்களின் எவ்வகையான ஆற்றல்களை (கற்றல் கூறுகளை) வெளிப்படுத்தக் கூடியதாக அமைகிறது?
5. கீழ்நிலைச் சிந்தனை வினாக்கள் மாணவர்களின் எவ்வகையான ஆற்றல்களை (கற்றல் கூறுகளை) வெளிப்படுத்தக் கூடியதாக அமைகிறது?
6. பின்வரும் பத்திகளைப் படித்து, உயர்நிலைச் சிந்தனை வினாக்கள் ஐந்தினை எழுதுக.

அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது கல்வி எனப்படும். மனிதர்களது வாழ்வில் உடலோம்பலுடன் அறிவோம்பலும் நிகழ்ந்து வரல் வேண்டும். அறிவோம்பலுக்குக் கல்வி தேவை. அக்கல்விப் பயிற்சிக்குரிய பருவம் இளமை



என்பதை விளக்க வேண்டுவதில்லை. இது பற்றியே இளமையில் கல் என்னும் முதுமொழி பிறந்தது.

இந்நாளில் ஏட்டுக் கல்வியே கல்வி என்னும் ஒரு கொள்கை எங்கும் நிலவி வருகிறது. ஏட்டுக்கல்வி மட்டும் கல்வி ஆகாது. இந்நாளில் கல்வியென்பது பொருளற்றுக் கிடக்கிறது. குறிப்பிட்ட பாடங்களை நெட்டுருச் செய்து, தேர்வில் தேறிப் பட்டம் பெற்று, ஒரு தொழிலில் நுழைவதற்குக் கல்வி ஒரு கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது. நாளடைவில் அக்கல்விக்கும் வாழ்விற்கும் தொடர்பில்லாமல் போகிறது. இது கல்வியாகுமா?

ஏட்டுக் கல்வி மட்டுமன்றித் தொழிற்கல்வி முதலியனவும் கல்வியின் பாற்பட்டனவே. கல்வித்துறைகள் பல திறத்தன. அவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவர் இயல்புக்குப் பொருந்தியதாகத் தோன்றும். அப்பொருந்திய ஒன்றில் சிறப்பு அறிவு பெறவும் பிறவற்றில் பொது அறிவு பெறவும் அவரவர் முயல்வது ஒழுங்காகும். தொழில் நோக்குடன் கல்வி பயிலுதல் வேண்டா என்றும் அறிவு விளக்கத்தின் பொருட்டுக் கல்வி பயிலுதல் வேண்டும் என்றும் இயற்கை அன்னை எச்சரிக்கை செய்தவண்ணமிருக்கிறாள். அவ்வெச்சரிக்கைக்கு மாணாக்கர் செவி சாய்த்து நடப்பாராக. அறிவு விளக்கத்துக்கெனக் கல்வி பயின்று, அவ்வறிவை நாட்டுத் தொழில்துறைகளைப் புதிய முறைகளில் வளர்க்கப் பயன்படுத்துவாராக.

7. பின்வரும் கடிதப் பகுதியைப் படித்து, உயர்நிலைச் சிந்தனை வினாக்கள் ஐந்தினை எழுதுக.

மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு,

வணக்கம். இந்தப் பூமிக்கு அணுக்கமாக உள்ள வானத்தை எப்படி வாங்கவோ விற்கவோ முடியும்? இவ்வாறு செய்ய வேண்டுமென்ற எண்ணமே வேடிக்கையாகத் தோன்றுகிறது. காற்றின் தூய்மையும் நீரின் உயர்வும் யாருக்கும் சொந்தமானவை அல்ல. அப்படியிருக்கையில் நீங்கள் அவற்றை எவ்வாறு விலைகொடுத்து வாங்க முடியும்?

இந்தப் பூமியின் ஒவ்வொரு துகளும் எம் மக்களுக்குப் புனிதமானதாகும். கூடவே, மின்னும் ஒளியுடைய ஒவ்வொரு ஊசியிலையும் எல்லாக் கடற்கரைகளும் கருமரங்களில் தவழும் பனித்துளிகளும் இன்னிசை எழுப்பித் திரியும் பூச்சி வகைகளும் எம் மக்களின் நினைவிலும் வாழ்விலும் மிகவும் புனிதமானவை. பாலூறும் மரத்திலிருந்து ஒழுகும் திரவம்கூட, செவ்விந்தியர்களின் நினைவுகளைச் சுமந்து நிற்கிறது.

எமது மக்கள், இந்தப் பூமியை எப்பொழுதும் மறப்பதேயில்லை. ஏனெனில் இதுவே எமக்குத் தாயாகும். நாங்கள் இந்த மண்ணுக்கு உரியவர்கள்; இந்த மண்ணும் எமக்குரியதாகும். இங்குள்ள நறுமணம் மிகுந்த மலர்கள் யாவும் எமது சகோதரிகள். மான்கள், குதிரைகள், கழுகுகள் போன்ற அனைத்தும் எமது சகோதரர்கள். மலை முகடுகள், பசும்புல்வெளிகளின் பனித்துளிகள், மட்டக் குதிரைகளின் உடல்சூட்டின் இதமான கதகதப்பு போன்றவையும் இங்குள்ள மனிதர்கள் எல்லாமும் ஒரே குடும்பம்.

வாஷிங்டனின் பெருந்தலைவர் எங்கள் நிலங்களை வாங்க விருப்பம் தெரிவித்துச் சொல்லி அனுப்பியபோது, நாங்கள் மனநிறைவுடன் வாழ எங்களுக்கென்று தனியிடம் ஒதுக்கித் தருவதாகவும் கூறியிருக்கிறார். எனவே, அவர் எங்களுக்குத் தந்தையாகவும் நாங்கள் அவருக்குப் பிள்ளைகளாகவும் ஆகிறோம். எனினும், இந்நிலமானது எங்களுக்கு மிகவும் புனிதமானது என்பதால் இதற்குச் சம்மதிப்பது என்பது மிகவும் இயலாத ஒன்றாகும். இந்நிலையில் எங்களுடைய நிலத்தைத் வாங்கும் உங்கள் திட்டத்தைப் பற்றிச் சிந்திப்போம்.

1. காற்றும் நீரும் தன் தூய்மையாக இருக்க வேண்டுமென நினைப்பவரைப் பட்டியலிடுக.
2. நாம் வாழும் பூமி யார் மக்களின் சொந்தம் என எண்ணுகிறாய்?
3. இயற்கை அழிந்து போனால் என்ன நிகழும் என சிந்தித்து கூறு
4. பூமியில் மனிதன் நோயின்றி வாழ நீ எவ்வகையான உதவிகளைச் செய்வாய்?
5. இப்பூமியில் மனிதன் மட்டும் வாழ இயலுமா? என சிந்தித்து காரணம் கூறுக.

(கோ. லோகநாதன்)

40%

10/25

மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,

இராணிப்பேட்டை, வேலூர் மாவட்டம்.

செயலாய்வு முன்தேர்வு / பின்தேர்வு வினாத்தாள்

நேரம் – 60 நிமிடம்

1. தேர்வு என்றால் என்ன?
   மாணவர்களின் கற்றல் அடைவை மதிப்பிடும் அளவுகோல்.
2. மதிப்பிடுதல் (மாணவர்களின் கற்றலை) என்றால் என்ன?
   பாடப்பொருள் முழுமையாக மாணவனை அடைந்துள்ளதா என்பதை அறிய பயன்படுத்தப்படும் அளவுகோல்.
3. உயர்தொடக்க வகுப்புகளில் மாணவர்களிடம் வினாக்கள் வினவுதலைக் குறிப்பிடும் கற்றல் விளைவுகள் எவை?
   * வாழ்வியலோடு தொடர்பு கொண்டு தீர்வு காணும் தொலை நோக்குத் திறன்.
4. உயர்நிலைச் சிந்தனை வினாக்கள் மாணவர்களின் எவ்வகையான ஆற்றல்களை (கற்றல் கூறுகளை) வெளிப்படுத்தக் கூடியதாக அமைகிறது?
   * ஒப்பு நோக்குதல்
   * தீர்வு காணல்.
   * செய்தி கிரகித்தல்.
   * அன்றாட வாழ்வில் பயன்படுத்துதல்.
5. கீழ்நிலைச் சிந்தனை வினாக்கள் மாணவர்களின் எவ்வகையான ஆற்றல்களை (கற்றல் கூறுகளை) வெளிப்படுத்தக் கூடியதாக அமைகிறது?
   பாடப்பொருள் சார்ந்த சிந்தனை வெளிப்படுத்தக் கூடியதாக அமைகிறது.
6. பின்வரும் பத்திக்களைப் படித்து, உயர்நிலைச் சிந்தனை வினாக்கள் ஐந்தினை எழுதுக.

அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது கல்வி எனப்படும். மனிதர்களது வாழ்வில் உடலோம்பலுடன் அறிவோம்பலும் நிகழ்ந்து வரல் வேண்டும். அறிவோம்பலுக்குக் கல்வி தேவை. அக்கல்விப் பயிற்சிக்குரிய பருவம் இளமை

என்பதை விளக்க வேண்டுவதில்லை. இது பற்றியே இளமையில் கல் என்னும் முதுமொழி பிறந்தது.

இந்நாளில் ஏட்டுக் கல்வியே கல்வி என்னும் ஒரு கொள்கை எங்கும் நிலவி வருகிறது. ஏட்டுக்கல்வி மட்டும் கல்வி ஆகாது. இந்நாளில் கல்வியென்பது பொருளற்றுக் கிடக்கிறது. குறிப்பிட்ட பாடங்களை நெட்டுருச் செய்து, தேர்வில் தேறிப் பட்டம் பெற்று, ஒரு தொழிலில் நுழைவதற்குக் கல்வி ஒரு கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது. நாளடைவில் அக்கல்விக்கும் வாழ்விற்கும் தொடர்பில்லாமல் போகிறது. இது கல்வியாகுமா?

ஏட்டுக் கல்வி மட்டுமன்றித் தொழிற்கல்வி முதலியனவும் கல்வியின் பாற்பட்டனவே. கல்வித்துறைகள் பல திறத்தன. அவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவர் இயல்புக்குப் பொருந்தியதாகத் தோன்றும். அப்பொருந்திய ஒன்றில் சிறப்பு அறிவு பெறவும் பிறவற்றில் பொது அறிவு பெறவும் அவரவர் முயல்வது ஒழுங்காகும். தொழில் நோக்குடன் கல்வி பயிலுதல் வேண்டா என்றும் அறிவு விளக்கத்தின் பொருட்டுக் கல்வி பயிலுதல் வேண்டும் என்றும் இயற்கை அன்னை எச்சரிக்கை செய்தவண்ணமிருக்கிறாள். அவ்வெச்சரிக்கைக்கு மாணாக்கர் செவி சாய்த்து நடப்பாராக. அறிவு விளக்கத்துக்கெனக் கல்வி பயின்று, அவ்வறிவை நாட்டுத் தொழில்துறைகளைப் புதிய முறைகளில் வளர்க்கப் பயன்படுத்துவாராக.

* தொழிற்கல்வி ஏன் அவசியம்?
* தற்போது உள்ள வேலைவாய்ப்பு எதன் அடிப்படையில் உள்ளது?
* அறிவினால் புதியமுயற்சிகளை மேற்கொண்டு உயர முடியுமா?
* கல்வி முறையில் எவ்வகையாக மாற்றம் தேவை?
* மேலைநாட்டு மோகம் அனைத்து நிலையும் பெற இயலுமா?

7. பின்வரும் கடிதப் பகுதியைப் படித்து, உயர்நிலைச் சிந்தனை வினாக்கள் ஐந்தினை எழுதுக.

மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு,

வணக்கம். இந்தப் பூமிக்கு அணுக்கமாக உள்ள வானத்தை எப்படி வாங்கவோ விற்கவோ முடியும்? இவ்வாறு செய்ய வேண்டுமென்ற எண்ணமே வேடிக்கையாகத் தோன்றுகிறது. காற்றின் தூய்மையும் நீரின் உயர்வும் யாருக்கும் சொந்தமானவை அல்ல. அப்படியிருக்கையில் நீங்கள் அவற்றை எவ்வாறு விலைகொடுத்து வாங்க முடியும்?

இந்தப் பூமியின் ஒவ்வொரு துகளும் எம் மக்களுக்குப் புனிதமானதாகும். கூடவே, மின்னும் ஒளியுடைய ஒவ்வொரு ஊசியிலையும் எல்லாக் கடற்கரைகளும் கருமரங்களில் தவழும் பனித்துளிகளும் இன்னிசை எழுப்பித் திரியும் பூச்சி வகைகளும் எம் மக்களின் நினைவிலும் வாழ்விலும் மிகவும் புனிதமானவை. பாலூறும் மரத்திலிருந்து ஒழுகும் திரவம்கூட, செவ்விந்தியர்களின் நினைவுகளைச் சுமந்து நிற்கிறது.

எமது மக்கள், இந்தப் பூமியை எப்பொழுதும் மறப்பதேயில்லை. ஏனெனில் இதுவே எமக்குத் தாயாகும். நாங்கள் இந்த மண்ணுக்கு உரியவர்கள்; இந்த மண்ணும் எமக்குரியதாகும். இங்குள்ள நறுமணம் மிகுந்த மலர்கள் யாவும் எமது சகோதரிகள். மான்கள், குதிரைகள், கழுகுகள் போன்ற அனைத்தும் எமது சகோதரர்கள். மலை முகடுகள், பசும்புல்வெளிகளின் பனித்துளிகள், மட்டக் குதிரைகளின் உடல்சூட்டின் இதமான கதகதப்பு போன்றவையும் இங்குள்ள மனிதர்கள் எல்லாமும் ஒரே குடும்பம்.

வாஷிங்டனின் பெருந்தலைவர் எங்கள் நிலங்களை வாங்க விருப்பம் தெரிவித்துச் சொல்லி அனுப்பியபோது, நாங்கள் மனநிறைவுடன் வாழ எங்களுக்கென்று தனியிடம் ஒதுக்கித் தருவதாகவும் கூறியிருக்கிறார். எனவே, அவர் எங்களுக்குத் தந்தையாகவும் நாங்கள் அவருக்குப் பிள்ளைகளாகவும் ஆகிறோம். எனினும், இந்நிலமானது எங்களுக்கு மிகவும் புனிதமானது என்பதால் இதற்குச் சம்மதிப்பது என்பது மிகவும் இயலாத ஒன்றாகும். இந்நிலையில் எங்களுடைய நிலத்தை வாங்கும் உங்கள் திட்டத்தைப் பற்றிச் சிந்திப்போம்.

* இறைவன் வழங்கிய இயற்கை வளங்கள் அனைவருக்கும் சமமானதா?
* மனிதர்களின் செயல்பாட்டால் நிலம், நீர், காற்று எவ்வாறு மாசு அடைகிறது?
* இயற்கையை நாம் எவ்வாறு பாதுகாக்க வேண்டும்?
* இயற்கையை சேதப்படுத்தாமல் வளர்ச்சி சாத்தியமா?
* இயற்கையை பாதுகாத்து வளர்ச்சி அடைய யோசனைகள் யாவை?

இரா. மலர்
அகரம்

[illegible]

நேரம் – 60 நிமிடம்

1. தேர்வு என்றால் என்ன?

2. மதிப்பிடுதல் (மாணவர்களின் கற்றலை) என்றால் என்ன?

3. உயர்தொடக்க வகுப்புகளில் மாணவர்களிடம் வினாக்கள் வினவுதலைக் குறிப்பிடும் கற்றல் விளைவுகள் எவை?

4. உயர்நிலைச் சிந்தனை வினாக்கள் மாணவர்களின் எவ்வகையான ஆற்றல்களை (கற்றல் கூறுகளை) வெளிப்படுத்தக் கூடியதாக அமைகிறது?

5. கீழ்நிலைச் சிந்தனை வினாக்கள் மாணவர்களின் எவ்வகையான ஆற்றல்களை (கற்றல் கூறுகளை) வெளிப்படுத்தக் கூடியதாக அமைகிறது?

6. பின்வரும் பத்தியினைப் படித்து, உயர்நிலைச் சிந்தனை வினாக்கள் ஐந்தினை எழுதுக.

அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது கல்வி எனப்படும். மனிதர்களது வாழ்வில் உடலோம்பலுடன் அறிவோம்பலும் நிகழ்ந்து வரல் வேண்டும். அறிவோம்பலுக்குக் கல்வி தேவை. அக்கல்விப் பயிற்சிக்குரிய பருவம் இளமை என்பதை விளக்க வேண்டுவதில்லை. இது பற்றியே இளமையில் கல் என்னும் முதுமொழி பிறந்தது.

இந்நாளில் ஏட்டுக் கல்வியே கல்வி என்னும் ஒரு கொள்கை எங்கும் நிலவி வருகிறது. ஏட்டுக்கல்வி மட்டும் கல்வி ஆகாது. இந்நாளில் கல்வி [illegible] பொருளற்றுக் கிடக்கிறது. குறிப்பிட்ட பாடங்களை நெட்டுருச் செய்து, தேர்வில் தேறிப் பட்டம் பெற்று, ஒரு தொழிலில் நுழைவதற்குக் கல்வி ஒரு கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது. நாளடைவில் அக்கல்விக்கும் வாழ்விற்கும் தொடர்பில்லாமல் போகிறது. இது கல்வியாகுமா?

ஏட்டுக் கல்வி மட்டுமன்றித் தொழிற்கல்வி முதலியனவும் கல்வியின் பாற்பட்டனவே. கல்வித்துறைகள் பல திறத்தன. அவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவர் இயல்புக்குப் பொருந்தியதாகத் தோன்றும். அப்பொருந்திய ஒன்றில் சிறப்பு அறிவு பெறவும் பிறவற்றில் பொது அறிவு பெறவும் அவரவர் முயல்வது ஒழுங்காகும். தொழில் நோக்குடன் கல்வி பயிலுதல் வேண்டா என்றும் அறிவு விளக்கத்தின் பொருட்டுக் கல்வி பயிலுதல் வேண்டும் என்றும் இயற்கை அன்னை எச்சரிக்கை செய்தவண்ணமிருக்கிறாள். அவ்வெச்சரிக்கைக்கு மாணாக்கர் செவி சாய்த்து நடப்பாராக. அறிவு விளக்கத்துக்கெனக் கல்வி பயின்று, அவ்வறிவை நாட்டுத் தொழில்துறைகளைப் புதிய முறைகளில் வளர்க்கப் பயன்படுத்துவாராக.

7. பின்வரும் கடிதப் பகுதியைப் படித்து, உயர்நிலைச் சிந்தனை வினாக்கள் ஐந்தினை எழுதுக.

மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு,

வணக்கம். இந்தப் பூமிக்கு அணுக்கமாக உள்ள வானத்தை எப்படி வாங்கவோ விற்கவோ முடியும்? இவ்வாறு செய்ய வேண்டுமென்ற எண்ணமே [illegible]

கொள்ளப்பட்டு வருகிறது. நாளடைவில் அக்கல்விக்கும் வாழ்விற்கும் தொடர்பில்லாமல் போகிறது. இது கல்வியாகுமா?

ஏட்டுக் கல்வி மட்டுமன்றித் தொழிற்கல்வி முதலியனவும் கல்வியின் பாற்பட்டனவே. கல்வித்துறைகள் பல திறத்தன. அவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவர் இயல்புக்குப் பொருந்தியதாகத் தோன்றும். அப்பொருந்திய ஒன்றில் சிறப்பு அறிவு பெறவும் பிறவற்றில் பொது அறிவு பெறவும் அவரவர் முயல்வது ஒழுங்காகும். தொழில் நோக்குடன் கல்வி பயிலுதல் வேண்டா என்றும் அறிவு விளக்கத்தின் பொருட்டுக் கல்வி பயிலுதல் வேண்டும் என்றும் இயற்கை அன்னை எச்சரிக்கை செய்தவண்ணமிருக்கிறாள். அவ்வெச்சரிக்கைக்கு மாணாக்கர் செவி சாய்த்து நடப்பாராக. அறிவு விளக்கத்துக்கெனக் கல்வி பயின்று, அவ்வறிவை நாட்டுத் தொழில்துறைகளைப் புதிய முறைகளில் வளர்க்கப் பயன்படுத்துவாராக.

தொழிற்கல்வி நமக்கு ஏன் தேவை?

'இளமையில் கல்' – இத் தொடரின் பொருளாக நீ அறிவது

ஏட்டுக்கல்விக்கும் நம் வாழ்விற்கும் உள்ள தொடர்பு

கல்வி மூலம் நாம் எவற்றை எல்லாம் பெற இயலும்

கடிதப் பகுதியைப் படித்து, உயர்நிலைச் சிந்தனை வினாக்கள் ஐந்தினை

யரசுத் தலைவர் அவர்களுக்கு,

எங்களுக்கென்று தனியிடம் ஒதுக்கித் தருவதாகவும் கூறியிருக்கிறார். எனவே, அவர் எங்களுக்குத் தந்தையாகவும் நாங்கள் அவருக்குப் பிள்ளைகளாகவும் ஆகிறோம். எனினும், இந்நிலமானது எங்களுக்கு மிகவும் புனிதமானது என்பதால் இதற்குச் சம்மதிப்பது என்பது மிகவும் இயலாத ஒன்றாகும். இந்நிலையில் எங்களுடைய நிலத்தை வாங்கும் உங்கள் திட்டத்தைப் பற்றிச் சிந்திப்போம்.

* பிரித்து எழுதுக: (i) மறைப்பதில்லை (ii) எமக்குரியதாகும்
* விலைகொடுத்து வாங்க இயலாதவை என எவற்றை கூறுகிறார்
* பழங்குடி மக்கள் எவற்றை புனிதமாக கருதினர்?
* காற்றும் நீரும் யாருக்கு உரிமையானது?
* இந்த மண்ணுக்கு உரியவர்களாக நீ யாரை நினைக்கிறா